| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
| | மாவட்டம் : | **இராமநாதபுரம்** | காலம்: | **15/05/2024** | முதல் | **19/05/2024** |
| | அறிக்கை எண் : | **039/ 2024** | வெளியீட்டு நாள்: | **14/05/2024** | | |

## இராமநாதபுரம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (09.5.2024 **முதல்** 13.05.2024) | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 19-05-2024- 08.30 வரை** | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 09/05 | 10/05 | 11/05 | 12/05 | 13/05 | **தேதி** | **நாள்-1** 15/05 | **நாள்-2** 16/05 | **நாள்-3** 17/05 | **நாள்-4** 18/05 | **நாள்-5** 19/05 |
| 0.0 | 0.1 | 2.4 | 10.5 | 5.9 | மழை (மி.மீ) | 3 | 26 | 29 | 12 | 2 |
| 37 | 36 | 36 | 36 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 35 | 33 | 33 | 32 |
| 27 | 25 | 24 | 26 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 24 | 23 | 22 | 21 |
| 5 | 5 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 80 | 76 | 86 | 83 | 70 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 79 | 78 | 70 | 72 | 68 | | 50 | 60 | 50 | 50 | 50 |
| 0 | 0 | 0 | 2 | 0 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 16 | 18 | 20 |
| 0 | 0 | 0 | தென் கிழக்கு | 0 | காற்றின் திசை | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **தெற்கு** | **தென் மேற்கு** | **தென் மேற்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 16, 17 மற்றும் 18ம் தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 32°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 21° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 முதல் 20 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு, தெற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 16 மற்றும் 17 தேதி கனமழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரி செய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும்,

வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மே 15, 16, 17, 18 மற்றும் 19 தேதி இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு. மேலும், மணிக்கு 30 முதல் 50 கி.மீ வேகத்தில் தரைக் காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டு கொடுத்தல், பப்பாளி, கொய்யா, முருங்கை பயிர்களுக்கு மண் அனைத்தல், கரும்பு பயிருக்கு விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கொடி வகை பயிர்பந்தல்களில் துரு பிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

கடந்த சில நாட்களாக, ஒரு சில இடங்களில் கோடை மழை பெய்துள்ளது. அடுத்த சில நாட்களுக்கும் மழை எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் தங்கள் நிலத்தில் கோடை உழவுப் பணியினை மேற்கொண்டு மழை நீர் வீணாகாமல் நிலத்தினுள் சேமிப்பதோடு, மண்ணில் மறைந்துள்ள பூச்சிகளின் முட்டைகள் மற்றும் கூட்டுப்புழுக்களை நிலத்தின் மேற்பரப்பிற்கு கொண்டுவந்து சூரிய ஒளியின் மூலம் அழிக்கலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தென்னை, மல்லிகை, கால்நடை.**

**தென்னை:**

தென்னையில் ஒவ்வொரு அறுவடைக்குப் பிறகும் வளைந்த முனையுடைய கம்பி மூலம் காண்டாமிருக வண்டினை சேகரித்து அளிக்கவும்.

ஒரு மரத்திற்கு மூன்று நாப்தலின் உருண்டையுடன் 100 கிராம் மணல் கலந்து மரத்தின் கொண்டைப் பகுதியில் வைத்து கட்டுப்படுத்தலாம்.

**மல்லிகை:**

மல்லிகை மலர் வகை பயிர்களில் நூற் புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது.

விவசாயிகள் தங்கள் வயல்களில் மண் மாதிரி எடுத்து நூற்புழு தாக்குதலைக் கண்காணிக்க வேண்டும்.

தாக்குதலின் அறிகுறியாக மல்லிகை செடிகளின் இலைகள் வெளிறிய இளம் மஞ்சளாகி பின்னர் கருகி விடும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 4 கிலோ என்ற அளவில் பேசிலோ மைசிஸ்லிலாசினஸ் எனும் உயிரி இடுபொருளை வேர்ப்பாகத்தின் அருகில் இட்டு நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

**கால்நடை:**

கோழிகளுக்கு பி-காம்ப்லெக்ஸ் திரவத்தினை குடி நீருடன் கலந்து அளிப்பதால் வெப்ப தாக்க அழற்சியை குறைக்கலாம்.

வெப்ப அழுத்தத்தை சமாளிக்க கோழி கொட்டகையின் ஒரு அலகு (யூனிட்) பகுதியில் பறவைகளின் எண்ணிக்கையை குறைத்து வைக்கும்படி விவசாயிகள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.